# ஆத்துமா மற்றும்

# ஆத்தும ஆதாயம்



R. ஜோஸ்

கன்னியாகுமரி

கிறிஸ்துவின் சபை

## பாடம் 2

## ஆத்துமா ஆதாய செய்வரின் ஆளுமை (குணநலன்கள்)

## (2 தீமோத்தேயுவிலிருந்து)

### முன்னுரை

ஆளுமை என்பது என்ன? ( What is personality?)

ஒருவரை மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்தி காண்பிக்கும் பண்புகள், தனித்தன்மை, குணநலன்கள், உணர்வுகள், சிந்தனைகளை உள்ளடங்கியதாக இருக்கிறது.

ஒரு ஆத்துமா ஆதாய வீரருடைய ஆளுமை என்பது எப்படி இருக்க வேண்டும் என்பதை பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதின தனது இரண்டாம் நிருபத்திலிருந்து கற்றுக்கொள்ள போகிறோம். பவுல் தனது கடைசி காலத்திலிருக்கும் போது (2 தீமோ 4:6-8). இளம் ஊழியராக இருந்த தீமோத்தேயு அவருடைய ஊழியத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக அவரை திடப்படுத்தவும், ஊக்கப்படுத்தவுமே இந்த இரண்டாம் நிருபம் பவுலால் எழுதப்பட்டது (2 தீமோ 4:5)

அ. தேவன் நமக்கு பயமுள்ள ஆவியை கொடுக்க வில்லை (2 தீமோ 1:7; ரோம 8:15)

1) கர்த்தருடைய ஊழியத்தை செய்கிறவர்கள் கோழையாக இருக்க கூடாது.
2) அவர்கள் தேவனுக்கு மாத்திரமே பயப்பட வேண்டும் , மனுஷர்கள் பயப்பட வேண்டாம். (லூக் 12:4-6)
    - பேதுருவும் யோவானும், அப்போஸ்தலர்களும் (அப் 4:19,20; அப் 5:29 )
    - எபிரெய மருத்துவச்சிகள் (யாத் 1:17)
    - எசேக்கியேல் (எசேக் 2:5-7)
3) தேவனுடைய ஊழியத்தை செய்கிற நம்முடன் தேவன் இருக்கிறார் (2 தீமோ 4:17; அப் 18:9,10; எபி 13:5)
4) கர்த்தர் நம்முடன் இருக்கிறார் என்கிற விசுவாசம் எப்படிப்பட்ட மனப்பான்மையை நமக்குள் ஏற்ப்படுத்த வேண்டும்?
    -. அது நமக்கு தைரியத்தை கொடுக்கிறது (ஏரே1:8; எபி 10:20)
    - அது நம்மை பலப்படுத்துகிறது ( 2 தீமோ 1:7;1 தீமோ 1:12)
    - அது நம்மை உத்வேகப்படுத்துகிறது (1 இராஜா 19:7)
    - அது நம்மை நேர்மறையான எண்ணத்தை கொடுக்கிறது (விசுவாசத்தை, தெளிவை) (2 தீமோ 1:7; எண் 13:30)
5) பயமானது வேதனையுள்ளது (1யோவா 4:18)
    - பயமே வளர்ச்சிக்கு தடையாக இருக்கிறது.

- மற்றவர்களை குறித்து பயத்தே சாதிக்கமுடியாத நிலைக்கு தள்ளப்படுதல்
- ஒரு காரியத்தை தொடக்கும் முன்பே அந்த காரியம் தோல்வி அடைந்துவிடுமோ என்கிற சந்தேகம்
- பயமானது தெளிவான மனநிலையை குழப்பமடைய செய்கிறது.
- தோல்வி அடைவதை குறித்த பயம் தவறான முடிவுக்கு கொண்டு செல்கிறது.

ஆ. வெட்கப்படாத ஊழியக்காரனாய் இருக்க வேண்டும் (2 தீமோ 1:8; 2 தீமோ 2:15)

1) சுவிசேஷத்தை குறித்து வெட்கப்பட கூடாது (2 தீமோ1:8)
2) இயேசு கிறிஸ்து நம்மை சகோதரர்கள் என்று சொல்ல அவர் வெட்கப்படவில்லை (எபி 2:11)
3) இயேசு கிறிஸ்துவின் மீது நாம் வைத்திருக்கும் நம்முடைய விசுவாசம் நம்மை வெட்கப்படுத்தாது ( 2 தீமோ 1:12; 1 பேது 2:6).
4) தேவன் நமக்கு கொடுத்திருக்கும் பொறுப்பு(ஊழியம்) மகா கனமானது அதை குறித்து வெட்கப்பட முடியாது (அப் 20:24; 1தீமோ 1:12-16)
5) தாழ்வு மனப்பான்மையாய் இருக்க வேண்டாம்
    - நீங்கள் தேவனுக்கு விசேஷித்தவர்கள் (மத் 10:31)
    - தேவனுக்கு முன்பாக உங்கள் பாதங்கள் அழகானவைகள் (எசா 52:7)
    - நீங்கள் கிறிஸ்துவின் நற்கந்தங்கள் (2 கொரி 2:15)
    - கிறிஸ்துவின் ஸ்தானாதிபதிகள் (தூதுவர்கள்) (2 கொரி 5:20)
    - உலகத்தை நியாயந்தீர்க்க போகிறவர்கள் ( 1 கொரி 6:1-3)
    - நீங்கள் தேவனுக்கு முன்பாக ஞானிகள் (1 கொரி 1:26,27)
    - மிக மேன்மையாக நீங்கள் இந்த சர்வ லோகத்தையும் படைந்த சர்வ வல்லமையுள்ள தேவனின் பிள்ளைகள் (யோவா 1:12)
6) உங்களை நீங்களே அற்பாக நிணைக்காதீர்கள். உங்கள் பலவீனத்தை பார்க்காமல் உங்கள் பலத்தை பாருக்கள்
7) மற்றவர்களுடன் உங்களை ஒப்பிட்டு பார்க்காதீர்கள், மற்றவர்களை விட உங்கள் திறமை தேவனுக்கு மிக முக்கியமானது.
8) உங்களிடைய விலையேறப்பட்ட ஆற்றலை அற்பமான காரியத்திற்காக விருதா செய்யாதீர்கள்
9) உங்களுக்கு கொடுக்கப்பட்ட இந்த கனத்திற்குரிய ஊழியத்தை நேர்ந்தியாக செய்து முடியுங்கள். (மத் 25:21)

இ. கிறிஸ்து இயேசுவின் கிருபையில் பலப்படுகிறவர்களாயிருங்கள் ( 2 தீமோ 2:1)

1) கிருபை என்பது தேவன் நமக்கு கொடுத்துக்கொண்டிருக்கிற மிகப் பெரிய பரிசு (எபே 2:5,8)
2) இன்று தேவனால் நமக்கு கிருபையாய் கொடுக்கப்பட்டிருக்கும் காரியங்கள் என்னென்ன என்பதை சிந்தித்து பாருங்கள்?
    - உபதேசத்தில் பலப்படுகிறோமா ?

- நேரத்தை பயன்படுத்தி கொள்கிறோமா?
- சபையில் பலப்படுகிறோமா?
- இரட்சிப்பில், விசுவாசத்தில் பலப்படுகிறோமா?

3) ஒரு போர்வீரனாக நீங்கள் பலப்பட வேண்டும் (2 தீமோ 2:3; எபே 6:10)
4) சட்டத்தின் படி மல்யுத்தம் பண்ண வேண்டும் (2 தீமோ 2:5)
5) சிந்தையில் பலப்படுங்கள் (1 பேது 4:1; எபி 4:12-14)

ஈ. சுவிசேஷகனுடைய வேலையைச் செய்யுங்கள் (2 தீமோ 4:2,4)

1) ஆத்துமா ஆதாயம் செய்வதே நம்முடைய பிரதான நோக்கமாக இருக்கிறது, இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷம் இல்லாமல் இதை நம்மால் செய்ய முடியாது (மாற் 16:15,16)
2) சுவிசேஷம் என்பது நற்செய்தி ஆகும். பாவத்தினால் மரித்திருக்கும், ஆத்துமா தேவனுடய கோபத்திற்கு நேராக இருக்கிறது. அந்த ஆத்துமா காப்பற்ற படுவதற்காக வழியை காண்பிப்பதே நற்செய்தியாக இருக்கிறது (எபே 2:1-10; 1 கொரி 15:1-3),
3) சுவிசேஷத்தை கேட்டு விசுவாசிப்பதால் மாத்திரம் அல்ல அதற்கு கீழ்படியும் பொருட்டாக ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும் போது இரட்சிக்கபட முடியும் (மாற் 16:15,16; அப் 2:38; 1 பேது 3:21)
4) சுவிசேஷகராக நீங்கள் ஞாபகம் வைத்துங்கொள்ள வேண்டியது
    - பாவம் எவ்வளவு மோசமான காரியம் என்பதையும் உங்களுடைய பணி எவ்வளவு முக்கியமானது என்பதையும் உணர்ந்து கொள்ளுங்கள் (எசா 1:4-6; மத் 9:36,38)
    - நானும் பாவியாயிருந்தேன் என்பதை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள் (தாழ்மை) (1 தீமோ 1:15)
    - சுவிசேஷத்தை போதிக்கிறவர்களை குறைகூறி தாழ்ந்ததிருங்கள், அவர்கள் மட்டம் தட்டாதீர்கள், முதலில் அவர்களிடம் இருக்கும் நல்ல காரியத்தை கூறி பாராட்டி பேசுங்கள் (அப் 17:22)
    - பின்பு அவர்கள் பாவத்திலிருக்கிறதை அவர்களுக்கு உணர செய்யுங்கள் (அப் 2:36-37; அப் 17:30), அந்த பாவத்திலிருந்து வெளியே வர வழியை காண்பியுங்கள் (அப் 8:35-39; அப் 16:30-33)
    - அவரை தேவனுடைய வீட்டிற்குள் (சபைகுள்) அழைத்துக்கொண்டு வாருங்கள் (1 தீமோ 3:15; அப் 2:47)
    - கர்த்தருக்கு கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்னும் பயத்தோடு உங்களுடைய ஊழியத்தை நிறைவேற்ற பிரயாசப்படுங்கள் ( 2 தீமோ 4:5; ரோமா 14:12)